# செய்தி வெளியீடு

**செ.வெ. எண். 19** **நாள். 15.12.2017**

**எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு ஆய்வு மற்றும் அணைத்து முகமைகள் ஒருங்கிணைப்பு தொடர்பாக, மாநில அளவில் சிறப்பு அலுவலர் நிர்ணயிக்கப்பட்டுளளார் என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 21.12.2017 அன்று நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, ஆய்வு மற்றும் அனைத்து முகமைகள் ஒருங்கிணைப்பு தொடர்பாக, இந்திய தேர்தல் ஆணைய இயக்குநர் திரு.விக்ரம் பத்ரா, இ.வ.ப., அவர்கள் நாளை 16.12.2017 தமிழகம் வருகை தரவுள்ளார் என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணைய இயக்குநர் திரு.விக்ரம் பத்ரா, இ.வ.ப., அவர்களை 94450 36524 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ஏற்கனவே, இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் பொதுப்பார்வையாளர்களாக திரு.கம்லேஷ் குமார் பந்த், இ.ஆ.ப., (94450 71063) அவர்களும், செல்வி.அல்கா ஸ்ரீவஸ்தவா, இ.ஆ.ப., (94450 36541) அவர்களும், காவல் பார்வையாளர்களாக திரு.இம்மானுவேல் கே. முய்வா, இ.கா.ப., (94450 71061) அவர்களும், திரு.குர்ஷீத் அகமது, இ.கா.ப., (94450 36533) அவர்களும், செலவினப் பார்வையாளர்களாக திரு.குமார் பிரணவ், இ.வ.ப., (9445036548) அவர்களும், திரு.ஷில் ஆஷீஸ், இ.வ.ப., (94450 36530) அவர்களும் நியமிக்கப்பட்டு தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பொதுமக்கள் தங்கள் வாக்குகளை நியாயமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் செலுத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**